1994 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 நபர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அவர்களில் 3 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள 4 பேர்களுக்கு மட்டுமல்லாமல், இன்னும் அவர்கள் குழந்தைகள் எல்லாம் மைனர்களாக இருக்கிற காரணத்தால் நிறைய பேர் மனு செய்யக்கூடிய வாய்ப்பு இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் படித்து, தகுதியின் அடிப்படையில் அந்தக் கல்லூரியில் வேலை வாய்ப்பு கோருகிறபோது, அந்தக் கல்லூரியில் வேலை வாய்ப்பு அளிக்க முன்வருவதோடு, அந்தப் பிள்ளைகளுக்கு அந்தக் கல்லூரியில் படிக்க இடவசதி அளிக்கவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலி அடிப்படையில், அதாவது 'டெய்லி வேஜஸ்' என்பார்களே, அந்த அடிப்படையில், முதலிலே 85 நாட்களுக்கு அனுமதித்துவிட்டு, பின்னால் வாய்ப்பு வரும்போது நிரந்தரமாக்கப்படலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. எனவே, தினக்கூலி அடிப்படையிலாவது நிலம் கொடுத்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலி அடிப்படையில் எடுக்கின்றபோது, இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 270, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

270—

பணிபுரியும் மகளிர்களுக்கு சங்ககிரியில் விடுதி அமைத்தல்.

*** 20490—** டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 ஏப்ரல் 13

(அ) சங்ககிரியில் பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தையும் ஒருங்கிணைத்து, 1994-95-ஆம் ஆண்டில் 1 லட்சம் மகளிருக்கு சுயவேலைவாய்ப்பைக் கொடுக்கும் ஒரு உன்னத லட்சியத்தோடு செயல்படும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் பணிபுரியும் மகளிருக்கு விடுதிகள் அமைக்க அரசு வகுத்துள்ள விதிமுறைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னார்வு நிறுவனங்கள் மாவட்ட சமூகநலத்துறை அலுவலர் மூலமாக மனுக்கள் கொடுக்கவேண்டும். அம்மனுக்களை அவர்கள். ஆய்வு செய்து, துணைத் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்புவார்கள், மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, அம்மனுக்களை அனுப்பி வைக்கும். மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து இந்த விடுதிகளுக்கு, தன்னார்வு நிறுவனங்களுக்கு நிதியை அளிக்கும். அதிலே தங்கக்கூடியவர்கள் 3 ஆண்டுகள் தங்கலாம். மேலும் தங்கவேண்டும் என்று சொன்னால், அந்த விடுதியினுடைய காப்பாளரிடத்திலே அனுமதியைப் பெற்றுத் தங்கவேண்டும். வருமானம் 2 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் விடுதிகளிலே தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஒரு இடத்தில் 100 பெண்கள் வேலை செய்யக்கூடியவர்கள் இருந்தால், அந்த இடத்திலே விடுதி அமைக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத்துறை என்றால், என்ன என்பதற்கு இலக்கணமாய் அமைந்து, உலக நாடுகளுக்கு வழிகாட்டியாய் விளங்கி, அன்னை தெரசாவினால், ஆசீர்வதிக்கப்பட்ட நமது அன்னையின் ஆட்சியில், சங்ககிரியில் உள்ள மாவட்ட கிராம நலச்சங்கம் என்ற தொண்டு நிறுவனம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அனைத்துத்

1994 ஏப்ரல் 13]

திட்டங்களையும் செயல்படுத்த முன்வருவதால், அந்தத் தன்னார்வுத் தொண்டு நிறுவனத்திற்கு நடப்பாண்டிலேயே இப்படிப்பட்ட விடுதி துவங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களாக இருந்தாலும் சமூகநலத்துறை இதற்கு என்று ஒரு இலக்கை வைத்திருக்கிறது. அந்த இலக்கிற்கு உட்பட்ட வகையில் அவர்கள் இருப்பார்களானால், நிச்சயமாக சமூகநலத்துறை அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 271, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

271 —

சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

*** 19487**— திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: ம்ாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆண்டு ஒன்றுக்கு 2000 டன் சந்தன மரங்களை தமிழ்நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசின் அனுமதி பெறவேண்டி முதன்மை வனத்துறைத் தலைவர் அரசிற்கு அனுப்பிய கருத்துரு ஒன்று அரசின் ஆயிவில் உள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வினாவிற்கு விடை அளிக்கின்றபோது, கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அதனுடைய அனுமதிக்காகக் காத்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எனில், மைய அரசு இதுவரை ஏதேனும் 'பாசிடிவாக' பதிலை நம்முடைய அரசுக்குத் தந்திருக்கிறதா? அப்படி இல்லாதபட்சத்தில் மைய அரசை என்னென்ன வகையில் நம்முடைய அரசு வற்புறுத்த இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.